## கூப்பன் அரிசி விலையேற்றம்

# 15-ம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது!

விலை சதம் 25 Registered as a Newspaper in Sri Lanka

# ஈழநாடு

மலர் 16 The Eelanaadu இதழ்: 149

யாழ்ப்பாணம் ஆனி 28 ஜ. ஆகிர் 21 வெள்ளிக்கிழமை 12-7-74

கொழும்பு, வியாழன்

பங்கீட்டு அரிசியின் விலையேற்றம் இம்மாதம் 15ந் திகதி திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வருகிறது.

உணவு ஆணையாளர் திரு. கே. பதமநாதன் சகல அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றுநிருபமொன்றில் இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தற்போது ரூபா 1-15 சதத்துக்கு பெறப்படும் ஒரு கொத்து அரிசி இம்மாதம் 15ந் திகதிமுதல் ரூபா 1-25 சதம் கொடுத்து பெற்றுக்கொள்ளவேண்டும். இலவசமாக விநியோகிக்கப்படும் பங்கீட்டு அரிசியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

வருமானவரி செலுத்துவோர் ஒருகொத்து அரிசியை (2 ருத்தல்) 2 ரூபா 50 சதம் கொடுத்து பெற்றுக்கொள்ளலாமே. [ஈ]

## அண்ணா சமாதியில்

## ஆர். எஸ். பெரேரா அஞ்சலி

சென்னை, ஜுலை 11

இலங்கை தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. ஆர். எஸ். பெரேரா இன்று சென்னையில் உள்ள தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணாதுரையின் சமாதிக்குச் சென்று அஞ்சலி செலுத்தினர்.

இதற்கு முன்பதாக இன்று காலையில் திரு பெரேரா தமிழ்நாடு முதல்வர் திரு. கருணாநிதியைச் சந்தித்துப் பேசினர். அவருடன் அவரது துணைவியாரும் சென்றிருந்தார். மத்திய ஒலிபரப்பு துணை அமைச்சர் திரு. தரம்வீர்சிங்காவும் உடன் இருந்தார். திரு. பெரேராவுக்கு புத்தகத் தொகுதியொன்றை திரு. கருணாநிதி அன்பளிப்புச் செய்தார்.

தமிழ்நாடு கவர்னர் திரு. கே. கே ஷாவையும் அமைச்சர் பெரேரா சந்தித்தார். திரு. பெரேரா தம்பதிக்கு தமிழ்நாடு கவர்னர் விருந்தளித்து கௌரவித்தார்.

### மேல் நீதிமன்ற விசாரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மேல் நீதிமன்ற விசாரணைகள் நீதவான் திரு. பி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் இம்மாதம் 15-ம் தேதி காலை ஆரம்பமாகும். (க)

# கச்சதீவு ஒப்பந்தப் பிரதிகள் பரிமாற்றம்

கொழும்பு, வியாழன்

கச்சதீவு தொடர்பான ஒப்பந்தப் பிரதிகளை இலங்கையும் இந்தியாவும் பரிமாறிக் கொண்டுள்ளன.

கச்சதீவு ஒப்பந்தப் பத்திரப் பிரதிகளைக் கடந்த திங்கட்கிழமையன்று இலங்கையிலுள்ள இந்தியத் தூதவர் திரு வி. எச். கோயெலோவும் இலங்கை பாதுகாப்பு வெளி விவகார அமைச்சின் செயலாளர் திரு. டபிள்யு டீ. ஜெயசிங்காவும் பரிமாறிக் கொண்டனர்.

கச்சதீவு ஒப்பந்தத்தை இருநாடுகளும் உறுதிப்படுத்திக்கொண்டதற்கான பத்திரங்களையே இவர்கள் பரிமாறிக்கொண்டதாகத் தெரிகின்றது.

## காலிமாநகர சபை பாராட்டித் தீர்மானம்

காலி, வியாழன்

கச்சதீவு பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு கண்டமையைப் பாராட்டி காலி மாநகரசபை ஏகமனதாக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

இந்தியப் பிரதமருடன் நட்புமுறையில் பேச்சுவார்த்தை நடத்தி கச்சதீவை இலங்கைக்கே சொந்தமாக்கித்தந்துள்ள பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைப் பாராட்டுகிறோம் என்று தீர்மானம் கூறுகிறது.

காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கைகளைப் பின்பற்றி ஆக்கபூர்வ நடவடிக்கைகளை கமத்து கொண்டு வருவது குறித்தும் பிரதமருக்கு காலி மாநகர சபை பாராட்டுத் தெரிவித்துள்ளது. காலி மேயர் திரு. ராஜகுலதிலகா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கச்சதீவு உடன்பாடு சம்பந்தமான இத் தீர்மானம் நிறைவேறியது. (ஈ)

நிற்சாமம் துப்பாக்கிச் சூடு

## முதுகைத் துளைத்துக்கொண்டு குண்டு பாய்ந்திருந்தது

### டாக்டர் சாட்சியம்

ஆனைக்கோட்டை, வியா.

"துவக்குச் சூடு நல்லப்புவின் முதுகுப்பக்கத்தில துளைத்து, நெஞ்சுப்பக்கம் கஎலும்புக்கூட்டையும் தசைகளையும் தாக்கி வெளிவந்தன"

நிற்சாமம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்குப் பலியான நல்லப்புவின் மரண விசாரணையில் சாட்சியமளித்த சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினர்.

மல்லாகம் நீதவான் திரு. ஜேசுரத்தினம் முன்னிலையில் நடந்த மரண விசாரணையில் பிரேதபரிசோதனை நடத்திய டாக்டர் சுப்பிரமணியம் மேலும் கூறியதாவது:-

நல்லப்புவின் முதுகில் பிராண்டிய காயமும் வலது கை பெருவிரலில் உரஞ்சல் காயமும் வலதுபக்க முகத்தில் கண்டல் காயமும் இருந்தன.

துப்பாக்கிச்சூட்டுக் காயத்தால்தான் இவர் மரணமடைந்தார். துப்பாக்கியால் காயம் ஏற்பட்டிருந்தால் 30 யாருக்கு அப்பால் இருந்து சுட்டிருக்கவேண்டும். மழல் துப்பாக்கியால் காயமேற்பட்டிருந்தால் 50 யாருக்கப்பால் சுட்டிருக்கவேண்டும். சூடு வாங்கியபின் பத்து யார் ஓடிச்சென்று விழுந்திருக்கலாம். அப்போது காயம் ஏற்பட்டபின் மூன்று மணித்தியாலம் உயிருடன் இருந்திருக்கலாம்.

சாட்சியமளித்த டாக்டரை சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் குறுக்கு விசாரணை செய்தபோது டாக்டர் கூறியதாவது, எந்தத் துவக்கால் காயம் ஏற்பட்டாலும் எதிரி சூடு வாங்கியபோது சுட்டவரை பார்த்துக்கொண்டு இருந்திருக்கமுடியாது. பின்காட்டி ஓடிய போதுதான் சூடுபட்டிருக்க வேண்டும். சூடு விழுந்ததும் சூடுவேண்டிய இடத்திலேயே இறந்து விழுந்து இருக்கலாம். பின் முதுகில் ஏற்பட்டகாயம் அவர் விழுந்தபின் அவரின் காலைப்பிடித்து இழுத்த சமயம் ஏற்பட்டு இருக்கலாம். முகத்தில் ஏற்பட்டகாயம் அவர் சூடுபட்டதும் குப்புற விழுந்ததினால் ஏற்பட்டு இருக்கலாம்.

சங்கானை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சிக்ரா சாட்சியமளிக்கையில் கூறியதாவது, சம்பவதினம் இரண்டரை மணிக்கு எனது வீட்டில் இருந்தேன். அப்போது பொலிஸ் கான்ஸ்டபிள் பெனுண்டோ வந்து இறந்தவருடனும் இராசரத்தினம் ஆகியோரும் கலட்டியில் துப்பாக்கிகளுடன் நிற்பதாக, தனக்கு தகவல் கிடைத்ததாகக் கூறினர். இன்னும் மூவரான பழனி, பசுபதி, ராசையா ஆகியோர் தனக்கு துப்பாக்கியால் காயம் விளைவித்த சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வந்ததாகவும் கூறினர். உடனே துப்பாக்கியும் சன்னங்களும் எடுத்துக்கொண்டு கான்ஸ்டபிள் ரணவக்கா விஜயரத்னா, செல்லத்துரை ஆகியோரையும் கூட்டிச் சென்று மூன்று சந்தேக நபர்களையும் கைது செய்யுமாறு கன்ஸ்டபிள் பெர்ணாண்டோவிடம் கூறினேன்.

பிற்பகல் மூன்றரை மணி போல் பொலிஸ் நிலையத்தில் இருக்கும் போது கான்ஸ்டபிள் செல்வத்துரையும் மற்

(4ம் பக்கம் பார்க்க)

வெள்ளிவிழா இறுதி நிகழ்ச்சிகள்:

# யாழ். நகர வீதிகளில் அலங்கார ஊர்திகள் பவனி!

### வண்டிச்சவாரி, சைக்கில், படகு, நீச்சல் விநோத உடைப் போட்டிகளுமுண்டு!

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மாநகரசபையின் வெள்ளிவிழாவை யொட்டி மாட்டுவண்டில் சவாரிப் போட்டி, வள்ள ஓட்டப் போட்டி, நீச்சல் போட்டி, சைக்கிள் ஓட்டப்போட்டி ஆகியன இடம்பெறவிருக்கிறது.

நாளை யாழ். கோட்டை முற்றவெளி மைதானத்தில் பிற்பகல் 2-30 மணிக்கு மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி ஆரம்பமாகும்.

இவை தவிர விநோத உடைப்போட்டி, சிறுவர்களுக்கான போட்டி, உதைபந்தாட்ட, கால்பந்தாட்ட, கூடைப்பந்தாட்டப் போட்டிகளும் தினமும் நடைபெற்று வருகிறது.

இறுதி நாளான 14-ம் தேதி காலை 6 மணிக்கு மரதன் ஓட்டம் ஆரம்பமாகும். இதைத் தொடர்ந்து ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும் இடம்பெறும்.

காலை 7 மணிக்கு படகுஓட்டப்போட்டி இடம்பெறும். காலை 7-30 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதிகள் வழியாக கலாச்சார கைத்தொழில் அலங்கார ஊர்திகள் பவனி இடம்பெறும்.

காலை 8-00 மணிக்கு நீச்சல் போட்டியும் மாலை 4 மணிக்கு விநோத உடைப்போட்டியும் குழந்தைகளுக்கான போட்டிகளும் நடைபெறும்.

வெள்ளி விழாவையொட்டி, உதைபந்தாட்ட, கைப்பந்தாட்ட, கூடைப்பந்தாட்ட போட்டிகளும் தினமும் நடைபெற்றுவருகிறது.

இம்மாதம் 14-ம் திகதி மாலை 5-30 மணிக்கு யாழ். மாநகரசபைக்கு எதிரில் கலாநிதி ஆனந்தகுமாரசாமியின் சிலையைத் திறந்துவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. யாழ். பஸ் நிலையத்திற்கு எதிரில் சோமசுந்தரப்புலவருக்குச் சிலைநிறுவுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது.

யாழ். மாநகர சபை, பொதுநூல் நிலையம், மணிக்கூட்டுக்கோபுரம், யாழ். நவீன மார்க்கட் என்பன ஆகிய [illegible] ...ளது.

2ம் பக்கம் பார்க்க

## வைத்திய மாணவருக்கென போதனை ஆஸ்பத்திரி

பேராதனை, வெள்ளி

வைத்தியத்துறை மாணவருக்கென இங்கு போதனை ஆஸ்பத்திரி ஒன்று அமைக்கப்படவுள்ளது.

5 கோடியே 60 லட்சம் ரூபா செலவில் அமையவிருக்கும் இந்த ஆஸ்பத்திரியில் வைத்திய மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். ஹங்கேரி அரசாங்கத்தின் உதவியுடன் இது நிறுவப்படவுள்ளது.

பேராதனையில் மூன்று ஏக்கர் நிலத்தில் இதற்கான கட்டிடங்கள் அமையும். இம்மாதம் 16ந் திகதி பேராதனைக்கு விஜயம் செய்யவுள்ள சுகாதார அமைச்சர் திரு. டபிள்யு ஆரியதாசா இந்த ஆஸ்பத்திரி அமையவிருக்கும் இடத்தைப்பார்வையிடுவார். (ஈ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் - ராணி சினிமாவில்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.—ஜெயலலிதா
முத்துராமன்—நம்பியார்
நடித்த
ஒரு தாய் மக்கள்

ஸ்ரீதர் சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
THE CAT 'O' NINE TAILS
வெகு விரைவில் MAGNUMFORCE (Cinemascope)

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 9-30, சனி, ஞாயிறு காலை 10-30

இது ஒரு வழக்கமான கதை அல்ல.
முற்றிலும் மாறுபட்ட கதை.
தனக்குரிய மனைவியை, தான் அடையவேண்டிய
அன்புச் செல்வத்தை தேடிப் புறப்படும்
ஒரு கோடீஸ்வரனின் கதை
அது குணங்கள் கொண்டவளாம் ஒரு பாவை
அது யாரோ எவரோ—அவள்தான்......

ராமன் தேடிய சீதை

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நம்பியார் - அசோகன் - நாகேஷ் - மனோரமா
டைரக்ஷன்: ப. நீலகண்டன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

லிடோ (யாழ்ப்பாணம்)
ஷர்மிலா தாகூர், ராஜேந்திரகுமார் நடித்த
தினசரி 4 காட்சிகள்
தலாஷ் (TALASH)
(ஈஸ்ட்மன் வர்ண ஹிந்திச் சித்திரம்)

# "உற்பத்தி கூடினால் விருந்தோம்பல் பெருகும்"

—வி. பி.

உடுப்பிட்டி, வியாழன்

"பெண்மையின் சிறப்பில் தான் இல்லற வாழ்வு தங்கியுள்ளது. பெண்ணிடம் அன்பு இல்லாவிடின் அப்பெண் வாழும் வீடு காடாக மாறிவிடும். இதனாலேயே உலகம் பெண்மையைப் போற்றுகின்றது. ஒரு கணவனின் குணாதிசயங்களை அவனது மனைவியின் குணாதிசயங்களைக் கொண்டு அறிந்துகொள்ளலாம். தனது மனைவி நல்லவளென ஊர் போற்றினால் கணவனுடையும் பெருமிதத்துக்கோர் அளவில்லை. அக்கணவனை ஊரவர்களும் நல்லவளின் கணவன் என மதிப்பர்."

இவ்வாறு பண்டிதை செல்வி தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கருணையம்பதி மூத்தவிநாயகர் சனசமூக நிலைய ஆண்டுவிழாவில் பேசுகையில் கூறினார். இவ் விழா விபுலானந்தர் அரங்கில் தொடர்ந்து பண்டிதர் க. முத்துவேலு தலைமையில் நடைபெற்றது.

திரு. வி. பொன்னம்பலம் பேசும்பொழுது கூறியதாவது:

"அன்பும், அறமும் சமூக மக்களனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதென்று வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார். மனிதன் வாழும் முறையை வள்ளுவர் நன்கு ஆராய்ந்துள்ளார். செம்மையாக வாழ்பவன் அருளைப் பெறுபவனாக இருப்பினும் அவனுக்கும் பொருள் வேண்டுமெனக் குறிப்பிடுகின்றார். தனிமனித வாழ்வு பயனற்றது. எமது வாழ்வு பரவலாக அமைய வேண்டும். பிறநாட்டவர்கள் வியக்கும் அளவிற்கு நாட்டில் உற்பத்தி துரிதமாக்கப்பட்டாலே விருந்தோம்பல் பெருகும்."

கலாநிதி அ. சண்முகதாஸ் திரு. ஆ. சிவராசா ஆகியோரும் பேசினர். உடுப்பிட்டியூர் வானம்பாடிகள் குழுவினரின் வில்லிசையும், நாட்டியநடனமும், கமலோன் இசைக்குழுவினரின் நிகழ்ச்சியும், பட்டிமன்றமும் இரு நாடகங்களும் இடம்பெற்றன.

சாந்தி (சங்கானை)
தினசரி 6-30, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
TULIKA
சிங்களத்திலும் தமிழிலும்
வெ. ச. 4-15 ஞா. 10-30
CARRY ON ROUND THE BEND

வெலிங்டன்? வெல்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
சந்திரோதயம்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி - சாவித்திரி
படித்தால் மட்டும் போதுமா

## ஞானவைரவர் கோவில் இன்றைய நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணார்பண்ணை நல்ல தண்ணீர் கிணற்றடி ஞான வைரவர் கும்பாபிஷேக 8-ம் நாள் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும் விசேஷ அபிஷேகத்தின் பின்னர், மாலை 5-30 மணிக்கு தமிழ்மணி எஸ். கணேசசுந்தரத்தின் கூட்டுவழிபாடு இடம் பெறும் அதன்பின்னர் "நாளும் தமிழ் வளர்த்த ஞானசம்பந்தர்" எனும் பொருள்பற்றி திரு. ஈழவேந்தன் உரைநிகழ்த்துவார். இரவு 7 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததம்பிரான் சுவாமிகள் "சிறுத்தொண்ட நாயனார்" எனும் பொருள்பற்றி கதாபிரசங்கம் நிகழ்த்துவார். அதன்பின் வண்ணை எம். எஸ். சண்முகநாதன் கோஷ்டி மற்றும் பழனிவேல் கோஷ்டியினரின் மேளக்கச்சேரி இடம் பெறும்.

## பட்டிமன்றம்

சுழிபுரம், வியாழன்

பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தினர் பண்ணாகம் ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தில் வரும் சனிக்கிழமை 13-ந் திகதி மாலை 'மனிதனை உருவாக்குவது சூழ்நிலையா? அல்லது சொந்த முயற்சியா?' என்ற தலைப்பில் ஆசிரியர் திரு. [illegible] சிவப்பிரகாசம் தலைமையில் பட்டி மன்றம் நடைபெறும்.

## பாலர் கலைவிழாவும் பொருட்காட்சியும்

யாழ்ப்பாணம், வெள்ளி

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலைப் பாலர் வகுப்புகளின் கலைவிழாவும், பொருட்காட்சியும் இம்மாதம் 14ம் திகதி நடைபெறவிருக்கின்றன. இவ்விழாவில் பிரதம அதிதியாக வடமாநிலக் கல்வியதிபதி திரு. சி. மாணிக்கவாசகர் கலந்துகொள்வார். நல்லூர் வட்டாரக் கல்வியதிகாரி [illegible] சோ. மகேஸ்வரஐயர் சிறப்புரையாற்றுவார். (அ)

## எச்சாட்டி வைரவர் உற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சுதுமலை தெற்கு எச்சாட்டி வைரவர் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 14-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது. இரவு 7 மணியிலிருந்து விசேஷ தவில் கச்சேரி இடம் பெறும். (அ)

## "கூட்டுறவுச் ... பொருளா... ஓர் உ...

சங்கா...

பொருளாதார ...க்கு ஓர் வளர்ந்தோல ... பதுதான் கூட்டுறவு ... இந்த அடிப்படை ...லேயே இலங்கையில் ... ஐம்பது வருடங்க... கூட்டுறவு இயக்கம் ...கப்பட்டது. 1910-ம் ... கைத்தொழில், கைத்... புரிவோர்க்கு உதவு... மாக ஐக்கியநாணய... ஆரம்பிக்கப்பட்டது. ... பின் இரண்டாம் ... யுத்தத்தின்போது ... நெருக்கடியைச் ... கூ. பண்டகசாலைகள் ... கணக்கில் ஸ்தாபித்த... மூலம் மக்களுக்கு ... பொருட்கள் பகிர்ந்... பட்டு சிறந்த சே... செய்தது.

இவ்வாறு கூட்டுற... விருத்தி உத்தியோ... திரு. சி. சபாரத்தி... காலை ப. நோ. கூ. ... தேச கூட்டுறவாளர் ... தினவிழாவில் "கூட்... வரலாறு" என்னும் ... பற்றி உரையாற்... கூறினார்.

## இன்றைய பலன்

ஆனி மாதம் 28-ந் ... (12-7-74)

மேஷம்: பரந்த ... பான்மையுடன் செ... வீர்கள். பொதுப்ப... அதிகாரபூர்வ ஏற்... ரிஷபம்: செய்... தடைகள் வருவதாகும். ... சூரிகளின் கழுகுப்... உங்கள் பக்கம் திருப்...

மிதுனம்: எழுத்தா... ளருக்குச் சிறப்பான ... பத்திரிகைத் தொழி... படுபவர்கள் அதிக ப... வர்.

கடகம்: வாழ்க்கை... கதியில் நடைபெறும். ... பாராத தடைகளா... னேற்றம் பாதிக்க ப... உடல்நலத்தைப் பேண...

சிம்மம்: எதிர்பாரா... கள் ஏமாற்றத்தைத் ... எதிரிகளின் சூழ்ச்சி ... இருக்கும். தனிவழி... ணத்தைத் தவிர்த்தல்...

கன்னி: குடும்ப ... மனதுக்கு நிம்மதி ... நீண்டநாள் பூமிப் ... சமரசமாக முடிவடை...

துலாம்: பிரச்னைகள் ... சிக்கலாகும். உணவு... தில் பிரிவுக்குறைவு... படும். வர்மையான ... களுடன் பழகாதி... நன்று.

விருச்சிகம்: பெ... மூலம் புகழுக்கு இட... அரசியலவாதிகளுக்கு ... டம் அடிக்கலாம். ... மூலம் பொருள்வரவு... கும்.

தனுசு: இதயங்கள்... தற்கு இன்று நல்... அபிப்பிராயபேதங்க... யும், பிரிந்தவர்கள் ... கையில் மீண்டும் இணை...

மகரம்: பொருள்... திற்கு இடமுண்டு ... பாற்று மிடத்தி... தடைப்பு வேலைகள்... பெறும். சிக்கலைத்தவி...

கும்பம்: அற்ப வி... கும்ஆத்திரமடைவீர்... ரிய நண்பர் ஒருவரை ... துக்கொள்ள நேரி... அடக்கம் வேண்டும்.

மீனம்: கண்களில் ... தெறிக்கும். கருத்தி... வம் தோன்றும். ... யில் கோணலாலே ... புகழுந்தானே.

சோதிடக்கலா...

திருமலை க. வேலுப்...

5-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா - (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
★ இதுவரை எந்தப் படத்துக்குமில்லாத பெண்கள் கூட்டம்.
சிவாஜி, உஷாநந்தினி, முத்துராமன், ஏ. சகுந்தலா, சோ, மனோரமா,
'பொன்னூஞ்சல்'

உங்கள் உள்ளங்களை மகிழ்விக்க
விஜயம் செய்துள்ளாள்!
யாழ் - வின்ஸர் வெண்திரையில்
அசோக் பிக்சர்ஸ் அளிக்கும்
வந்தாளே மகராசி
தினசரி 4 காட்சிகள்
★ ஜெய்சங்கர் ★ டி. கே. பகவதி
★ வி. எஸ். ராகவன் ★ சோ
★ ஜெயலலிதா (இரு வேடங்களில்) ★ புஷ்பலதா
★ எம். என். ராஜம்
நடித்தது
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்:
இயக்குநர் திலகம் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்
பாடல்கள்: வாலி

மனோஹரா (யாழ்ப்பாணம்)
மகத்தான 2-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
கே. ஆர். விஜயா
சுந்தரராஜன்
மனோகர்
வாயாடி

Regal (Jaffna)
Daily 4-45, 7-00 9-30 p. m.
HORST BUCHHOLZ in
NINE HOURS TO RAMA

றியோ (யாழ். நகர மண்டபம்)
தினசரி 10-30, 2-00, 4-15, 7-15, 9-45




ஆபிரிக்காவின் இரகசியக் காடுகள்
(சினிமாஸ்கோப் கலர்)
இதுவரை வெளிவராத அதி உன்னத வன வாழ்க்கைச் சித்திரம்.
50-க்கு மேற்பட்ட மாணவர் குழுவிற்கு தலா ரூபா 1/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

### மணிவாக்கு

உண்மையான நிறைவை ஆழமான ஆற்றைப் போன்றது; ஓட்டமிருந்தாலும் சலசலப்பிருப்பதில்லை.

—அறிஞர்.

ஈழநாடு

EELA NADU

12 - 7 - 74

## யாழ். நகரம்

யாழ். மாநகராட்சிமன்றம் அதன் வெள்ளி விழாவை இவ்வாரம் சிறப்பாகக் கொண்டாடுகிறது. இருபத்தைந்து வருடங்களில் தமிழகின் தலைநகரமென்று வர்ணிக்கப்படும் யாழ். நகரம் கண்ட முன்னேற்றத்தை நகரவிதிகளே எடுத்துரைக்கும். இந்த நெருக்கடி காலத்திலும் இந்த விழாவைக் கொண்டாட முடிந்தது நகரமக்களின்-தமிழ்மக்களின் வலுமையிற் செம்மையை எடுத்துக்காட்டுகின்றது.

ஒளவையாருக்கும் திருவள்ளுவருக்கும் நகரின் கேந்திரஸ்தானமான பெரியகடையில் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. யாழ். நகரம் தமிழ்நகரமென்ற பூரணத்துவம் அடைவதற்கு இவை நல்ல அறிகுறியாகும். நகரத்தின் சுத்தத்தை வெள்ளிவிழாவில் கலந்து கொண்ட அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பெரிதும் பாராட்டியிருக்கிறார். இப்பெருமை மேயர் திரு. அல்பிரட் துரையப்பாவையே சாரும்.

நகரநிர்வாகத்தின் பிரச்னைகள் பல. உள்ளூராட்சி மன்றங்களில் உட்பகை நிறைந்திருப்பதை நாடெங்கும் காணமுடிகின்றது. ஒருசில பேர் வழிகளின் செல்வாக்கினையோ அல்லது அதிகாரத்தையோ காப்பாற்றும் நோக்கத்துடன் இயங்கும் தாபனங்கள் பல. அது மட்டுமல்ல பாராளுமன்ற அரசியலுக்கு ஒரு பயிற்சிக்களமாகவும் இருக்கின்றன சில உள்ளூராட்சி மன்றங்கள். யாழ். நகரத்தைப்பொறுத்தளவில், குறைகள் என்னவாயினும் கடந்த கால்நூற்றாண்டில் நகரம் கண்ட வளர்ச்சி, நாட்டின் சரித்திரத்தில் இடம்பெறவல்லது.

வளர்ச்சியைப் பாராட்டும் அதேசமயத்தில் நகரத்தின் அபிவிருத்தி வேலை தொடர்ந்து நடப்பதற்கு வேண்டிய தேவைகளை நாம் மறக்கலாகாது. போதிய பணமில்லாதது நகர நிர்வாகத்தின் பெருங்குறையாகும். வரியை அதிகரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் நகர வாசிகளை-வசதியற்றவர்களை பாதிக்குமென்ற காரணத்தால் கைவிடப்பட்டிருக்கிறது.

கொழும்பு மாநகருக்கு அடுத்ததாகக் கணிக்கப்படும் யாழ். மாநகரம், நகர மக்களின் அவசிய தேவைகளைப் பூர்த்திசெய்யாமல் தடைபட்டிருப்பது நல்லாட்சிக்கு அழகல்ல. அபிவிருத்தி வேலைக்கு நகர நிதியில் இருபது சதவிதம் செலவுசெய்யப்படவேண்டுமென்பதை அமைச்சர் பீலிக்ஸ் வற்புறுத்தியிருக்கிறார். இரண்டு சதத்திலிருந்து இருபது சதத்துக்கு எட்டிப்பாய்வது இயலாத காரியமாகும். வளரும் நகரத்தின் அத்தியாவசியமான தேவைகளை எவ்விதம் பூர்த்தி செய்யலாம்?

வெளிநாடுசென்று திரும்பிய கொழும்பு மாநகர முதல்வர் திரு. ஏ. எச். எம். பௌஸி தாம் பார்வையிட்ட பாக்தாத், கராச்சி மாநகரங்களின் நிதிநிலைமை வியப்புக்குரியவை என்கிறார். மத்திய அரசின் மான்யமும், நிதிதிரட்டக் கையாளும் வரிவகைகளும் அற்புதமானவையென்பதே கொழும்பு மேயரின் அனுபவமாகும்.

யாழ். நகர மன்றத்தின் முக்கியகட்டமான வெள்ளி விழாவுடன், நகர வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும் நிர்வாகத்தைத் திறம்பட நடத்தவும், நகர மக்கள் அனைவரும் நகர மன்றத்துக்கும் நகர முதல்வருக்கும் ஒத்துழைப்பு நல்குவது அவசியமாகும்.

# "உலகுக்கே சொந்தமானவர் திருவள்ளுவர்"

## சிலை திறப்பு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், வெள்ளி

வள்ளுவர் ஒரு மதத்தினருக்கோ, அல்லது நாட்டினருக்கோ உரியவர் அல்லர் அவர் உலகத்துக்கே உடைமையானவர்."

இவ்வாறு யாழ்ப்பாணம் சத்திரச் சந்தியில் திருவள்ளுவர் சிலையைத் திறந்துவைத்து பேசிய வித்துவான் சுப்பையா பிள்ளை கூறினர்.

யாழ். மாநகரசபை வெள்ளி விழாவை யொட்டி இச்சிலை திறந்து வைக்கப்பட்டது. யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் நடந்த திறப்பு விழாவில் வித்துவான் சுப்பையா பிள்ளை மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

வள்ளுவரின் குறள் நூல் உலகப்பொது நூல் இதுபல சமயத்தவரும் ஏற்ற பொது நூல். பல நாடுகள் இன்று பல மொழிகளில் இந்நூலை மொழி பெயர்த்துப் பயனடைவதிலிருந்து வள்ளுவரின் பெருமை புலப்படுகிறது. அத்தகைய வள்ளுவப் பெருந்தகைக்கு இன்று யாழ். மாநகரசபை வெள்ளி விழாவில் நகரமுதல்வர் சிலை எடுத்ததை தமிழ்மக்கள் பாராட்டாமல் இருக்கமுடியாது என்றார்.

திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:-

"இந்த இடத்தில் வர்த்தக ஸ்தாபனங்களுக்கு முன்பாக வள்ளுவர் சிலை அமைந்துள்ளது. வர்த்தகர்கள்செய்த பெருந்தன்மையாகும். வள்ளுவர் நேர்மையிலும் குணத்திலும் சிறப்பு மிக்கவர் இதே போன்று வர்த்தகர்கள் வள்ளுவரின் பாதையில் செல்ல முன்வர வேண்டும்."

திரு. கே. பி. ஹரன் பேசுகையில், "தமிழ்ப் பெரியார்களுக்கு யாழ். நகரில் நடந்த தமிழாராய்ச்சி மகாநாட்டின்போது சிலைகள் திறுவப்படவில்லை. அந்தக் குறையை யாழ். மாநகர சபை வெள்ளிவிழா கொண்டாடும் இச்சமயத்தில் நிவர்த்தி செய்தது பாராட்டுக்குரியது" என்றார்.

யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா பேசுகையில் "நான் மக்களால் தெரிவு செய்யப்பட்ட யாழ். நகர பிதா ஆயினுமிருந்தும் என்னை தமிழாராய்ச்சி மாநாட்டினர் அழைக்கவில்லை. அழைக்கவில்லையென்று நான் குறைகூற விரும்பவில்லை தமிழாராய்ச்சி மகாநாட்டின் போது திறுவப்படவேண்டிய பெரியார்களின் சிலைகளை அவர்கள் நிறுவத்தவறியதால் தான் நான் இன்று இப்பெரியார்களின் சிலைகளை திறுவியிருக்கின்றேன். நான் மக்களுக்கு செய்துவரும் நன்மைகளையும், அரசு செய்துவரும் நன்மைகளையும் மக்கள் உணர்வார்கள். இப்படி நான் காரியங்களை செய்து வரும்போது என்னை சிலர் தமிழ்த்துரோகி எனக்குறை கூறுகின்றனர். அப்படிக்கூறினாலும் நான் அதனை பொருட்படுத்தாது மக்களுக்குத் தொடர்ந்து எனது சேவையைச் செய்வேன் என்றார்.

ஸ்தபதியார் நாகலிங்கத்துக்கு மிக்கவைத் ஸ்தபதி அதிபர் திரு சங்கரதாசர் சார்பில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் பட்டாடை போர்த்தி வெள்ளிக்கேடயம் வழங்கினர் (ஆனை-நி)

யாழ். ஆஸ்பத்திரியில்

## மருந்துத் தட்டுப்பாடு நீங்குகிறது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடுகளை நீக்குவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பெரியாஸ்பத்திரிக்குத் தேவையான மருந்துகளை சுகாதார அமைச்சு உடனடியாக அனுப்பிவைத்துள்ளதாக யாழ். மேயர் திரு. துரையப்பாவுக்கு சுகாதார அமைச்சில் மருந்து விநியோகப் பகுதிக்குப் பொறுப்பாக இருப்பவரான டாக்டர் அன்டன் ஜயசூரிய எழுதியுள்ளார்.

அண்மையில் கொழும்புக்குச் சென்றிருந்த போது யாழ். மேயர் திரு. துரையப்பா சுகாதார அமைச்சர் திரு டபிள்யூ. ஆரியபாலாவை சந்தித்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் உள்ள குறைபாடுகள் பற்றி எடுத்துரைத்திருந்தார். இதை தொடர்ந்தே முதல் கட்டமாக இப்பொழுது ஆஸ்பத்திரி மருந்துத் தட்டுப்பாட்டை நீக்கும் நோக்கத்துடன் உடனடியாக மருந்து வகைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எழுத்தாளர், கலைஞர்களிடையே

## இரட்டைத் தன்மை ஒழித்துக்கட்டப்படவேண்டும்

திருகோணமலை, வியா

திருகோணமலையில் ஜூன் 22, 23-ந் தேதிகளில் நடைபெற்ற எழுத்தாளர் கலைஞர் மகாநாட்டையொட்டி, மேற்படி மகாநாட்டின் தலைமைக்குழு உறுப்பினர்களான திருவாளர்கள் எஸ். கே. ரகுநாதன், இக்பால், செல்வராசன், கே. டானியல், புதுவை இரத்தினதுரை, மூகலை வீரக்குட்டி, ராஜ தர்மராஜா, பாலமுனை பாரூக் ஆகியோர் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு:

நாடெங்கிலுமிருந்து உத்வேகமும் துடிப்புமுள்ள ஏராளமான படைப்பாளிகள் இம்மகாநாட்டிற் பங்கு பற்றி ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கி மகாநாட்டை வெற்றியீட்டச் செய்தனர். மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மீது சுமார் ஐந்து மணித்தியாலங்கள் வரை மிகக் காரசாரமான விவாதம் நடைபெற்றது. இந்த விவாதம் ஆரோக்கியமான கருத்துக்களைப் புடமிட்டு வெளிக்கொணரப் பெரிதும் உதவியளித்தது. மக்களுக்காகக் கலை இலக்கியம் படைக்கும் எழுத்தாளர் கலைஞர்கள் செல்ல வேண்டிய சரியான பாதை எது என்பதைப்பற்றி நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

புதிய ஜனநாயகப் புரட்சியின் வெற்றியில் மலரக்கூடிய உண்மையான ஒரு சோஷலிச அமைப்பின் கீழ் மக்களின் அடிப்படைப் பிரச்னைகள் தீர்வுபெற்ற பின்னர் இனமொழிப் பிரச்னைகள் வெகுசுலபமாகத் தீர்க்கப்படக்கூடியவை என்ற மார்க்சிய தத்துவத்தைப் புரட்டி மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்த முனைந்துள்ள மார்க்சலக்கியவாதிகளான சோவியத்சமூக ஏகாதிபத்திய தாசர்களை மகாநாடு வன்மையாகக் கண்டித்ததுடன் இவர்களையிட்டு எழுத்தாளர் கலைஞர்கள் மிகுந்த எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்றும் மகாநாடு பணித்தது.

இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதற்கும் மகாநாட்டின் தீர்மானங்களையும் முடிவுகளையும் செயற்படுத்துவதற்கும் மகாநாட்டில் 31 எழுத்தாளர் கலைஞர்களைக் கொண்ட தேசிய செயலவை ஒன்று திறுவப்பட்டது.

### நிச்சாமம்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரும் மூவரும் இறந்தவரை லொறியில் ஏற்றிக்கொண்டு வந்தார்கள். இறந்தவரை பார்க்கும் போது இரத்த வெள்ளத்துடன் அறிவு மயங்கி இருந்தார். அதே சமயம் அவர் உயிருடன் இருந்தாரா அல்லது உயிரற்று இருந்தாரா என்று சொல்லத் தெரியாது. நான் உடனே யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டேன்.

தங்களைக் கண்டதும் நல்லப்பு தங்களை நோக்கி சுட்டார், என்றும் அதன் பிற்பாடு தானும் ரணவக்காவும் உடன் திருப்பி சுட்டதாகவும் அதனால் காயம் ஏற்பட்டதாகவும் செல்லத்துரை என்னிடம் கூறினார்.

பொலிஸ் அதிகாரியை சட்டத்தரணி திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் குறுக்கு விசாரணை செய்த போது பொலிஸ் அதிகாரி கூறியதாவது: நான் கான்ஸ்டபிள் ரணவக்காவிடம் சுழல் துப்பாக்கி கொண்டுசெல்லுமாறு சொல்லவில்லை. அவர்களிடம் அநாவசியமாக ஒருவரையும் சுடவேண்டாமெனக் கூறினேன். இறந்தவரும் மற்றும் ஐவரும் பொலிசாரால் தேடப்பட்ட காரணம் அவர்கள் பொலிசாருக்கு எதிராகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்ததே.

நானும் ஏ. எஸ். பி. மஹாதவும் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு பிற்பகல் ஐந்து மணிக்குச் சென்று பார்த்தோம். இம்மாதம் 24-ந் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (ஸ)

ஆசிரியருக்கு கடிதம்

## பிரதமர் வருகையும் யாழ்ப்பாண வளாகமும்

யாழ்ப்பாணத்திற்குக் கிடைக்கவிருக்கும் பல்கலைக்கழக வளாகம், காலதாமதமாய்க் கிடைத்தபோதிலும் முழுவடிவத்தில் கிடையாத போதிலும் வரவேற்கப்பட வேண்டியதாகும். இது இந்நகர்களுக்கு கட்டும் உரிமையானதல்லாமல் ஈழத்துத் தமிழ் பேசும் மக்களின் உயர்தர கல்விக்கும் பயன்படக்கூடியதாக விளங்க வேண்டும். தரப்படுத்தல் முறையால் தவிக்கும் தமிழ் இளைஞரின் குறையைத் தீர்ப்பதாய் விளங்கவேண்டும். இவ்விதம் விளங்குமாயின் இவ்வளாகத்தின் திறப்பு வைபவத்தை எதிர்ப்பதோ பகிஷ்கரிப்பதோ பொருந்தாதது ஒருசெயலாகும் இவ்வைபவத்தை மட்டுமாவது அரசியற் கட்சிகளின் பூசல்களுக்கு அப்பாற்பட்டதொன்றாகக் கருதுவதே பொருத்தமாகும்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவிருக்கும் பிரதமருக்கு அதுவும் முதல் முறையாக விஜயம் செய்பவருக்கு யாழ்ப்பாணப் பொது மக்கள் சிறப்பான மனப்பூர்வமான வரவேற்பு அளிப்பதாலும் ஈழத்துத் தமிழ் பேசும் மக்களின் குறைகளைத் தீர்க்க பிரதமர் தனிப்பட்ட முறையிலாவது முயற்சித்துக் கொண்டு வருவதே நன்று. அத்தகைய முயற்சிகளுள் சிறந்ததொன்று. எமது அரசியலமைப்புச் சட்டத்தில் தமிழ் மொழிக்கு அளிக்க வேண்டிய உரிமைகள் பற்றி தீர்க்கமான முடிவுக்கு வருவதற்கு ஓர் சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டுவதாகும். இன்னொன்று காங்கேசன் இடைத்தேர்தலை நடாத்துவதற்குரிய காலத்தைக் குறிப்பதாகும்.

கச்சதீவுப் பிரச்னையையும் இலங்கை-இந்தியர் பிரச்னையையும் தீர்க்கக்கூடிய பிரதமருக்கு இவைமட்டும் இயலாத காரியமா? முன்னர் எப்போதும் இல்லாத வகையில் தற்போதைய பிரதமருக்கு இந்நாட்டில் ஆதரவு உண்டு. எனவே ஈழத்துத் தமிழரது பிரச்னையை தற்போதைய பிரதமரால் தீர்க்க முடியாதாயின் வேறெந்தப் பிரதமரால் தான் அது முடியுமோ?

இ. மகேஸ்வரன்.

சுண்டிக்குளி.

### பலத்த போட்டி இருக்கும்?

யாழ்ப்பாணம், வெள்ளி

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் யாழ். மாவட்டக்கிளையின் 13-வது ஆண்டுக்கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு பழையகச்சேரி வளவிலுள்ள சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

கிளைச்சங்கச் செயற்குழுவால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு தாய்ச்சங்க ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றும்பொருட்டு அனுப்பிய ஏழு தீர்மானங்களையும் தாய்ச்சங்கத் தலைவர் ஒருபட்சமாக நிராகரித்தது குறித்து பல அங்கத்தவர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க இருக்கின்றனர் என்று கூறப்பட்டது.

இதனால் இவ்வாண்டு புதிய செயற்குழு தேர்தலில் பலத்த போட்டி எதிர்பார்க்கப்படுகின்றது (ஈ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் பிரவுன் வீதி? வென்கோவில் மேல வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1974-ம் ஆண்டு ஜூலை 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. P. O. Box No. 49, Jaffna. Telegrams "Eelanadu" Telephone: 389

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org